# கலங்காதே என் நெஞ்சமே

கலங்காதே என் நெஞ்சமே (2)
கர்த்தர் யேசு அன்புசெய்ய
காலமெல்லாம் காத்திருக்க
கலக்கம் ஏன் நெஞ்சமே - நெஞ்சமே

**1**

இருளும் புயலும் உன்னை என்ன செய்திடும்
அருளும் அன்பும் மொழியும் யேசு
அருகிருக்கையில் (2)
வாழ்வில்வீழ்ந்து வருந்தும் போது
தோள்கொடுக்கின்றார் (2)
தாழ்ந்து வாடும் போது தயவு காட்டுவார்
தயவுகாட்டுவார் யேசு தயவுகாட்டுவார் (2)

**2**

உலகம் வெறுக்கும்போது
உன்னில் நிலைக்கின்;றார்
உயிர்ப்பும் உயிரும் ஈந்து நாளும்
உடன் இருக்கின்றார் ( 2 )
துன்பதுயரம் தூரப்போகும்
துணிந்து நின்றிடு ( 2 )
தூயதேவன் அருளை என்றும் நம்பிடு
என்றும் நம்பிடு அவரை என்றும் நம்பிடு ( 2 )

**3**

தன்னிடம் வந்த மக்கள் தாகம் தணிப்பவர்
தட்டும் ஓசைகேட்டவுன்
தாவி அணைப்பவர் ( 2 )
உன்னைத் தனது உள்ளங்கையில்
பொறித்து வைத்துள்ளார் ( 2 )
உலகம் முடியும்போது உன்னைக் கைவிடார்
உன்னைக் கைவிடார்
யேசு உன்னைக் கைவிடார் ( 2 )